# <u>செய்தி குறிப்பு</u>

திரு.R.காமராஜ், முன்னாள் அமைச்சர், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை தற்போது நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திருவாரூர் மாவட்டம் என்பவர் மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்தது தொடர்பாக ஒரு விரிவான விசாரணை பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டது.

மேற்கண்ட விரிவான விசாரணையின்போது, அவர் **01.04.2015** முதல் **31.03.2021** வரை உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சராக இருந்த காலத்தில் அவருடைய அரசு பதவியை தவறாக பயன்படுத்தி, பல்வேறு ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டு கயலாபம் அடைந்து, அவர் வருமானத்திற்கு அதிகமாக அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அவர் பெயரிலும், அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் மற்றும் அவருடைய நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பெயரிலும் **ரூ.58,44,38,252/-** அளவுக்கு சொத்து சேர்ந்துள்ளதாக தெரிய வந்தது.

இந்த விரிவான விசாரணையின் கண்டறியப்பட்ட விபரங்களின் அடிப்படையில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற **எண்.4/2022** சட்டப் பிரிவுகள் 120(B) IPC, 13(2) r/w 13(1) (e), 109 IPC r/w 13(2) r/w 13(1) (e), 13(2) r/w 13(1) (b), 12 r/w 13(2) r/w 13(1) (b) of PC Act as amended in 2018-ன் படி **(1)** திரு.காமராஜ், முன்னாள் அமைச்சர், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை **(2)** Dr.M.K.இனியன், **3)** Dr.K.இன்பன், **4)** திரு.R.சந்திரகாசன் **5)** திரு.B.கிருஷ்ணமூர்த்தி மற்றும் **6)** திரு.S.உதயகுமார் ஆகியோர்கள் மீது **07.07.2022**ஆம் தேதி வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கின் புலன் விசாரணையின் தொடர்ச்சியாக சென்னை **(6)**, கோயம்புத்தூர் **(1)**, திருச்சி **(3)**, தஞ்சாவூர் **(4)** மற்றும் திருவாரூர் **(38)** மாவட்டங்களில் மொத்தம் **52** இடங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் இன்று **08.07.2022** சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையில் பணம் **ரூ.41,06,000/-**, தங்க நகைகள் **963** சவரன், சுமார் 23,960 கிராம் வெள்ளி, i-phone, கணிணி, பென் டிரைவ், Hard Discs மற்றும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் கணக்கில் வராத பணம் **ரூ.15,50,000/-** வங்கி பெட்டக சாவி, i-phone, கணிணி, பென் டிரைவ், Hard Discs மற்றும் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன. இந்த வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.